TNVR1B-000-034-2024

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராஜபாளையம்**

**முன்னிலை: திரு. ஆ.ராமநாதன்.,B.A., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, இராஜபாளையம்**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11–ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு எண்.22/2024**

1. சரஸ்வதி
2. ராமச்சந்திரன்
3. ஜெயந்தி – வாதிகள்

/எதிர்/

1. தி மெஜீரா ஹிண்டு பெர்மனென்ட் நிதி லிமிடெட்
   அதன் சேர்மன் மூலம்
2. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   இராஜபாளையம்.
3. மாவட்ட ஆட்சியர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
   விருதுநகர் மாவட்டம்.
4. வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   இராஜபாளையம். – பிரதிவாதிகள்

––––––

இவ்வழக்கு 14.02.2024–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 02.07.2026–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஆனந்தன் அவர்கள் ஆஜராகியும், 1–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.குணாளன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற கவனமான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

| | |
|---|---|
| அசல் வழக்கின் தன்மை; | விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி:– |

வாதிகள் தான் இறந்துபோன N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரியும், பிராது தபசில் கண்ட சொத்தினைப் பொறுத்து கடந்த 29.01.1996–ம் தேதி 2–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எண்.302/1996 தொடர்பான பதிவை சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் 1–ம் பிரதிவாதி நீக்கறவு செய்யும்படி 1–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரமும் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–

1. பிராது தபசில் கண்ட சொத்தானது, ஆதியில் N.L.நாராயணராஜா மற்றும் அவரது மனைவி ஆவுடையம்மாள் அவர்களுக்கு கடந்த 07.01.1949–ம் தேதிய

இராஜபாளையம் சப்டி ஆவண எண்.785/1949 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையம் மூலம் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்ததாகவும், மேற்படி N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியினருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றும், மேற்படி ஆவுடையம்மாளின் மூத்த சகோதரி மஞ்சம்மாள் என்றும், மேற்படி மஞ்சம்மாளின் கணவர் ராமசாமிராஜா என்றும், மேற்கண்ட மஞ்சம்மாள் என்பவர் கடந்த 1965–ம் ஆண்டு உடல்நலக்குறைவு காரணமாக தனது ஒரே மகனான 12 வயது பாலசுப்பிரமணியன் என்பவரை விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், மேற்படி N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் ஆகிய இருவரும் மேற்படி பாலசுப்பிரமணியன் என்பவரை, மேற்படி மஞ்சம்மாளின் கணவர் ராமசாமிராஜா என்பவரின் முழு சம்மதத்தின்பேரில் யாதொரு பிரதிபலனும் இன்றி தங்களது வளர்ப்பு மகனாக எடுத்துக்கொண்டு வளர்த்து வந்தார்கள் என்றும், அதனை தொடர்ந்து மேற்படி பாலசுப்பிரமணியனுக்கு. N.L.நாராயணராஜா ஆவுடையம்மாள் ஆகியோர்களே நல்லமுறையில் திருமணம் செய்துவைத்தும் மேற்படி பாலசுப்பிரமணியன் என்பவரே N.L நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியினரை, தனது பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் வைத்து தனத குடும்பத்துடன் பிராது தபசில் சொத்தினில் வசித்து, கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றும்,

2. இந்நிலையில் மேற்படி N.L.நாராயணராஜா பிராது தபசில் சொத்தினை பொறுத்து, எவ்வித விறுப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 24.07.1983–ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், மேற்படி N.L.நாராயணராஜா இறப்பிற்கு முன்பே மேற்படி பாலசுப்பிரமணியத்தின் தந்தையும், இறந்துபோன மஞ்சம்மாளின் கணவருமான ராமசாமிராஜா உடல்நலக்குறைவு காரணமாக காலமாகிவிட்டார் என்றும், அதனைத் தொடர்ந்து மேற்படி ஆவுடையம்மாள் தனது கணவர் இறந்த பின்பு பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து தனது வளர்ப்பு மகனான

பாலசுப்பிரமணியன் பெயரில் கடந்த 16.08.1984–ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதியுள்ளார் என்றும், அதனைத் தொடர்ந்து 1–ம் பிரதிவாதி நிறுவனத்திடம் கடந்த 29.01.1996–ம் தேதியில், பிராது தபசில் சொத்தினை ஈடாக வைத்து ஒரு சுவாதீனமில்லாத அடமானக் கடன் பத்திரத்தை எழுதி, இராஜபாளையம் சப்ரி ஆவண எண்.302/1996 என்ற எண்ணாக பதிவு செய்து, 18.02.1996 ம் தேதி ரூ.55,000/–த்தை 1–ம் பிரதிவாதியிடமிருந்து கடனாக பெற்றதாகவும், மேற்படி கடனுக்குண்டான வட்டியை மேற்படி பாலசுப்பிரமணியன் என்பவரே தனது சொந்த வருமானத்தை கொண்டு கடந்த 28.05.2000–ம் தேதியில் 1ம் பிரதிவாதியிடம் பெற்ற அடமானக்கடனை முழுவதுமாக செலுத்தி, 1–ம் பிரதிவாதி நிறுவனம் மேற்படி அடமானக்கடன் பத்திர ஆவண எண்.302/1996 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் தொடர்பாக ஏற்பட்ட வில்லங்கம் முழுவதும் அசல் ஆவணங்கள் தீர்ந்துவிட்டதாகவும், தாங்கள் வில்லங்கம் தொடர்பான அனைத்து பதிவுகளையும் நீக்கரவு செய்துவிடுவேம் என்று சொல்லி, மேற்படி அடமானக்கடன் முழுவதும் தீர்க்கப்பட்டதற்கான ரசீதும் வழங்கியுள்ளார்கள் என்றும், அதனைத் தொடர்ந்து மேற்படி அடமானக் கடன் சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தையும் 1ம் பிரதிவாதி திரும்ப ஒப்படைத்துவிட்டார் என்றும், இந்நிலையில் மேற்படி பாலசுப்பிரமணியன் கடந்த 23.06.2023–ம் தேதி மேற்படி ஆவுடையம்மாள் மற்றும் வாதிகளை விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும்,

3. இந்நிலையில் வாதிகளின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருந்த மேற்படி ஆவுடையம்மாள் கடந்த 08.02.2023–ம் தேதி இறந்து விட்டார் என்றும், அதன்பின்பு பிராது தபசில் சொத்தினை வாதிகள் தான் இன்று வரை யாருடைய இன்னலும் இடையூறும் இன்றியும் தபசில் சொத்திற்கு உண்டான வரி வகையறாக்கள் செலுத்தியும், தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில்,

வாதிகள், பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக வில்லங்கம் பார்த்ததில் மேற்படி ஆவுடையம்மாளும், 1–ம் வாதியின் கணவரும் 2. 3 வாதிகளின் தகப்பனாரும். மேற்படி இறந்துபோன பாலசுப்பிரமணியன் என்பவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதியிடம் பெற்ற அடமான பத்திரப் பதிவை நீக்கரவு செய்யாமல் இருந்து வருவது தெரியவந்ததாகவும், பின்னர் வாதிகள் மேற்படி அடமானக்கடன் தீர்ந்து விட்டதற்கான ரசீதை கொடுத்து மேற்படி பதிவை ரத்து செய்யும்படி 2ம் பிரதிவாதியிடம் தெரிவித்தபோது, 2ம் பிரதிவாதி அடமானக் கடன் கொடுத்தவர் நேரடியாக வந்துதான் பதிவை ரத்து செய்யும்படி சொல்லி மறுத்துவிட்டார் என்றும், எனவே பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து, வாதிகள் தான் இறந்துபோன மேற்படி N.L.நாராயணராஜா – ஆவுடையம்மாள் தம்பதியரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், பிராது தபசில் கண்ட சொத்தினைப் பொறுத்து கடந்த 29.01.1996ம் தேதி 2–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எண்.302/1996 தொடர்பான பதிவை சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் 1–ம் பிரதிவாதி நீக்கறவு செய்யும்படி 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 1–ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

1. வாதிகள் தரப்பில், ஆவுடையம்மாள் மற்றும் வளர்ப்பு மகனான பாரசுப்பிரமணின் ஆகிய இருவரும் சேர்ந்து இந்த 1–ம் பிரதிவாதியடம் கடந்த 29.01.1996 தேதியில் சப்டி ஆவண எண்.302/1996 என்ற எண்ணாக பதிவு செய்து 18.02.1995 ம் தேதி ரூ.55,000/– இந்த 1–ம் பிரதிவாதியிடம் கடனாக பெற்று, மேற்படி கடனுக்குண்டான வட்டியை பாலசுப்பிரமணியனே செலுத்திவந்தார் எனக்

கூறியுள்ளது இந்த 1–பிரதிவாதியால் ஏற்கப்படுவதாகவும், மேற்படி அடமானக்கடன் தீர்க்கப்பட்டதற்கான ரசீதும் இந்த 1–ம் பிரதிவாதி வழங்கியுள்ளார் எனக் கூறியுள்ளதும் உண்மையான சங்கதி என்றும், இந்த 1–ம் பிரதிவாதி மேற்படி பாலசுப்பிரமணியனிடம் அனைத்து அசல் ஆவணங்களையும் ஒப்படைத்துவிட்டார் என்றும், இந்த வாதி, 1–ம் பிரதிவாதியிடம் உயிலின் அடிப்படையில் செல் ரசீது வழங்க கேட்டதில் இந்த 1–ம் பிரதிவாதி மேற்படி பாலசுப்பிரமணியம் நேரடி வாரிசு இல்லாத காரணத்தினாலும் மேலும் அவரும் இறந்துவிட்ட காரணத்தினால் இந்த 1–ம் பிரதிவாதியை தக்க நிதீமன்ற உத்தரவு பெறும் பட்சத்தில் ரசீது பதிந்து தருவதற்கு தயாராக உள்ளார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

<u>3. 2–ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்:–</u>

1. வாதிகளால் பிரஸ்தாபிக்கப்படும் 29.01.1996–ம் தேதிய அடமானக் கடன் பத்திரத்தினை செல்லடிப்பது குறித்து, வாதிகள் உரிய முத்திரைக் கட்டணமும் பதிவுக் கட்டணமும் இப்பிரதிவாதி அலுவலகத்தில் செலுத்தும்பட்சத்தில் இப்பிரதிவாதி மேற்படி 29.01.1996–ம் தேதிய அடமானக் கடன் பத்திரத்தினை செல்லடித்துக் கொடுக்க இப்பிரதிவாதி தயாராக உள்ளதாகவும், எனவே தாவாஅசல் வழக்கில் சமூகம் நீதிமன்றம் பிறப்பிக்கும் தீர்ப்பின் அடிப்படையில் இப்பிரதிவாதி செயல்பட தயாராக உள்ளார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

<u>3. 4–ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்:–</u>

1. 2–ம் பிரதிவாதியின் ஸ்தல விசாரணையின் அடிப்படையில் N.L. நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியருக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றும், மேற்படி ஆவுடையம்மாளுக்கு, மஞ்சம்மாள் என்ற சகோதரி இருந்துள்ளார்

என்றும், மேற்படி மஞ்சம்மாளின் மகன் பாலசுப்பிரமணியன் என்பவரை மேற்படி N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் ஆகியோர் தங்களது வளர்ப்பு மகனாக எடுத்துக் கொண்டு வளர்த்து வந்துள்ளனர் என்றும், இந்நிலையில் மேற்படி ஆவுடையம்மாள் தனது வளர்ப்பு மகனும், 1–ம் வாதியின் கணவருமான பாலசுப்பிரமணியன் என்பவருக்கு தனக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து கடந்த 16.08.1984–ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்படாத உயில் சாசனம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும், இந்நிலையில் மேற்படி ஆவுடையம்மாளும் கடந்த 09.02.2023 அன்று இறந்துவிட்டார் என்றும், எனவே தாவா அசல் வழக்கினை பொறுத்து சமூகம் நீதிமன்றம் பிறப்பிக்கும் தீர்ப்பின் அடிப்படையில் 4–ம் பிரதிவாதி செயல்படி தயாராக உள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

4) இருதரப்பு வாதுரை மற்றும் எதிர்வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டு கடந்த 11.09.2025–ம் தேதியன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

## எழுவினாக்கள்

*1. Whether the plaitiff is entitled to relief of declaration as they are LR's of deceased Narayanaraja- Avudaiyammal as prayed for?*

*2. Whether the plaintiff is entitled to relief of the document is null and void and mandatory injunction against defendant?*

*3. What other relief the plaintiff is entitled?*

*4. Whether the plaintiff is entitled to cost of suit?*

**5.** வாதிகள் தரப்பில் வாதி வா.சா.1,2 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.சா.ஆ.1 முதல் 3 குறியீடு

செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7) **வழக்கெழுவினா எண்.1-ற்கான பரிசீலனை மற்றும் தீர்வு**

***1. Whether the plaitiff is entitled to relief of declaration as they are LR's of deceased Narayanaraja- Avudaiyammal as prayed for?***

07-01) பிராது தபசில் கண்ட சொத்தானது, ஆதியில் N.L.நாராயணராஜா மற்றும் அவரது மனைவி ஆவுடையம்மாள் அவர்களுக்கு சப்டி ஆவண எண்.785/1949 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையம் மூலம் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்ததாகவும், மேற்படி N.L.ஆவுடையம்மாள்- நாராயணராஜா தம்பதியினருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றும், மேற்படி ஆவுடையம்மாளின் மூத்த சகோதரி மஞ்சம்மாள் கடந்த 1965-ம் ஆண்டு உடல்நலக்குறைவு காரணமாக தனது ஒரே மகனான 12 வயது பாலசுப்பிரமணியன் என்பவரை விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், மேற்படி பாலசுப்பிரமணியன் என்பவரை N.L நாராயணராஜா- ஆவுடையம்மாள் தம்பதியினர் வளர்ப்பு மகனாக எடுத்துக்கொண்டு வளர்த்து வந்ததாகவும், மேற்படி ஆவுடையம்மாள் தனது கணவர் இறந்த பின்பு பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து தனது வளர்ப்பு மகனான பாலசுப்பிரமணியன் பெயரில் கடந்த 16.08.1984-ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதியுள்ளார் என்றும், அதனைத் தொடர்ந்து மேற்படி ஆவுடையம்மாள் மற்றும் அவரது வளர்ப்பு மகனான பாலசுப்பிரமணியன் 1-ம் பிரதிவாதி நிறுவனத்திடம் கடந்த 29.01.1996-ம் தேதியில், பிராது தபசில் சொத்தினை ஈடாக வைத்து ஒரு சுவாதீனமில்லாத அடமானக் கடன் பத்திரத்தை எழுதி, ரூ.55,000/-த்தை 1-ம் பிரதிவாதியிடமிருந்து கடனாக

பெற்றதாகவும், அதனைத் தொடர்ந்து கடந்த 28.05.2000–ம் தேதியில் 1–ம் பிரதிவாதியிடம் பெற்ற அடமானக்கடனை முழுவதுமாக செலுத்தி, 1–ம் பிரதிவாதி நிறுவனம் மேற்படி அடமானக்கடன் பத்திர ஆவண எண்.302/1996 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் தொடர்பாக ஏற்பட்ட வில்லங்கம் முழுவதும் அசல் ஆவணங்கள் தீர்ந்துவிட்டதாகவும், அதன்பின்பு பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து வில்லங்கம் பார்த்ததில் மேற்படி 1ம் பிரதிவாதியிடம் பெற்ற அடமான பத்திரப் பதிவை நீக்கரவு செய்யாமல் இருந்து வருவது தெரியவந்ததாகவும், எனவே பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து, வாதிகள் தான் இறந்துபோன மேற்படி N.L.நாராயணராஜா – ஆவுடையம்மாள் தம்பதியரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், பிராது தபசில் கண்ட சொத்தினைப் பொறுத்து 2–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எண்.302/1996 தொடர்பான பதிவை 1–ம் பிரதிவாதி நீக்கறவு செய்யக் கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

07–02) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆக நாராயணராஜா, ஆவுடையம்மாள் பேரில் உள்ள கிரைய பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராது தபசில் சொத்தைப் பொறுத்து ஆவுடையம்மாள், பாலசுப்பிரமணியன் பெயரில் கடந்த 16.08.1984–ம் தேதி எழுதிக்கொடுத்த ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆக அடமானத் தொகை 1–ம் பிரதிவாதியிடம் செலுத்திய்தற்கான ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாராயண ராஜா இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.5,6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆவுடையம்மாள் மற்றும் பாலசுப்பிரமணியன் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.7,8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 ஆக பாலசுப்பிரமணியன்

வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாரிசு சான்றிதழில் வாதிகளின் பெயர் இருப்பதை அறிய முடிகிறது. வழக்குச் சொத்தைப் பொறுத்து வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் 1–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் 1–ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.11,12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாராயணராஜா, ஆவுடையம்மாள் தம்பதிக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்த மனு வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆவுடையம்மாள் ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.15 ஆக 1 முதல் 3 வாதிகளிள் ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் தந்தை பெயர் பாலசுப்பிரமணியன் என இருப்பதை அறிய முடிகிறது. வழக்குச் சொத்திற்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீகள், குடிநீர் ரசீதுகள் வா.சா.ஆ.16, 17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

07–03) மேற்படி வாதிகள் தரப்பு வா.சா.ஆ.1 முதல் 16 வரையிலனா ஆவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது, மேற்படி N.L.ஆவுடையம்மாள்– நாராயணராஜா தம்பதியினருக்கு குழந்தைகள் ஏதும் இல்லாமல், பாலசுப்பிரமணியன் என்பவரை வளர்ப்பு மகனாக எடுத்துக்கொண்டு வளர்த்து வந்து, ஆவுடையம்மாள் வா.சா.ஆ.2 தாவாச் சொத்தைப் பொறுத்து உயில் சாசனம் மூலம் தனது வளர்ப்பு மகன் பாலசுப்பிரமணியனுக்கு எழுதிக்கொடுத்து, மேற்படி ஆவுடையம்மாள் மற்றும் பாலசுப்பிரமணியனும் வா.சா.ஆ.3 மூலம் 1–ம் பிரதிவாதிக்கு ஒரு அடமானப் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர். இதுகுறித்து **வா.சா.1,** 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் போது,

" நாராயணராஜா ஆவுடையம்மாள் தம்பதிகளுக்கு குழந்தை எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆவுடையம்மாளுக்கு மஞ்சம்மாள் என்ற

சகோதரி இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு பாலசுப்பிரமணியன் என்ற மகன் இருந்தார் என்றால் சரிதான். அவர்தான் எங்கள் தகப்பனார் என்றால் சரிதான். நாராயண ராஜா, ஆவுடையம்மாள் தம்பதியினர் எனது தகப்பனாரை வளர்ப்பு பிள்ளையாக கருதி வளர்த்து வந்தார்கள் என்றால் சரிதான்."

07–04) மேலும் 1–ம் பிரதிவாதி, வாதிகள் தரப்பு வழக்குரையை ஒப்புக்கொண்டு நீதிமன்றம் மூலமாக உத்தரவு பெற்று வந்தால் வாதிகளுக்கு அடமான நீக்கம் பதிவு செய்து தருவதாக கூறியுள்ளார்கள். மேலும், இவ்வழக்கின் 3,4 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் குறித்த மனுவினை தீர்மானிக்கும் அதிகாரம் படைத்த வருவாய் துறை அலுவலர்கள் தரப்பில் மேற்படி N.L. நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியருக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றும், பாலசுப்பிரமணியன் என்பவரை தங்களது வளர்ப்பு மகனாக எடுத்துக் கொண்டு வளர்த்து வந்துள்ளனர் என்றும், சொல்லப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய விவாதங்களின் அடிப்படையில் வாதிகள் தான் இறந்துபோன N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என வழக்கெழுவினா 1–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>**8) வழக்கெழுவினா எண் 2 –ற்கான பரிசீலனை மற்றும் தீர்வு:–**</u>

***2. Whether the plaintiff is entitled to relief of the document is null and void and mandatory injunction against defendant?***

08–01) வழக்கு எழுவினா 1–ற்கு காணப்பட்ட விடையின்படி, வாதிகள் தான் இறந்துபோன N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது, அதன்படி பிராது தபசில் கண்ட சொத்தினைப் பொறுத்து கடந்த 29.01.1996–ம் தேதி 2–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எண்.302/1996 தொடர்பான கடனை

வா.சா.ஆ.4 மூலம் செலுத்திவிட்டதால் பதிவை 1–ம் பிரதிவாதி நீக்கறவு செய்யும்படி 1–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரமும் வாதிகளுக்கு வழங்கி வழக்கெழுவினா 2–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**9) வழக்கெழுவினா எண்.3–ற்கான பரிசீலனை மற்றும் தீர்வு:–**

**3. வாதிகளுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது ?**

வழக்கில் வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் எதுவுமில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே வழக்கெழுவினா எண்.3–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**10) வழக்கெழுவினா எண்.4–ற்கான பரிசீலனை மற்றும் தீர்வு:–**

**4. வழக்கின் செலவுத் தொகை வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

வழக்கின் செலவு தொகையை தரப்பினர்கள் அவர்அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு அவ்வாறே வழக்கு எழுவினா எண்.4–ற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,**

| | |
|---|---|
| 1. | **தாவா வழக்கு அனுமதிப்படுகிறது.**<br><br>வாதிகள் தான் இறந்துபோன N.L.நாராயணராஜா–ஆவுடையம்மாள் தம்பதியரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், பிராது தபசில் கண்ட சொத்தினைப் பொறுத்து கடந்த 29.01.1996–ம் தேதி 2–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவண எண்.302/1996 தொடர்பான பதிவை |

| | |
|---|---|
| | 1 மாத காலத்திற்குள் 1–ம் பிரதிவாதி நீக்கறவு செய்யும்படி 1–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 11.08.2026–ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN Digitally signed by RAMANATHAN

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**இராஜபாளையம்**

**<u>வாதிகள் தரப்பு சாட்சி:–</u>**

1. வா.சா.1 – ராமச்சந்திரன் (2–ம் வாதி)
2. வா.சா.2 – மகேஸ்வரி

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 /வா.சா.1 | 17.06.1949 | நாராயணராஜா, ஆவுடையம்மாள் பேரில் உள்ள கிரைய பத்திரம் | உண்மை நகல் |
| 2 | வா.சா.ஆ.2 /வா.சா.1 | 16.08.1984 | உயில் சாசனம் | அசல் |
| 3 | வா.சா.ஆ.3 /வா.சா.1 | 29.01.1996 | 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரம் | அசல் |
| 4. | வா.சா.ஆ.4 /வா.சா.1 | 28.05.2000 | அடமானத் தொகை 1–ம் | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரதிவாதியிடம் செலுத்திய்தற்கான ரசீது | |
| 5 | வா.சா.ஆ.5 /வா.சா.1 | 24.07.1983 | நாராயண ராஜா இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 6. | வா.சா.ஆ.6 /வா.சா.1 | --- | நாராயண ராஜா வாரிசு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 7. | வா.சா.ஆ.7 /வா.சா.1 | 08.02.2023 | ஆவுடையம்மாள் இறப்புச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 8. | வா.சா.ஆ.8 /வா.சா.1 | 23.06.2015 | பாலசுப்பிரமணியன் இறப்புச் சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 9. | வா.சா.ஆ.9 /வா.சா.1 | --- | பாலசுப்பிரமணியன் வாரிசு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 10. | வா.சா.ஆ.10 /வா.சா.1 | --- | வழக்குச் சொத்தைப் பொறுத்து வில்லங்க சான்றிதழ் | இணையவழி பெறப்பட்ட நகல் |
| 11. | வா.சா.ஆ.11 /வா.சா.1 | 26.06.2023 | வாதிகள் 1–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 12. | வா.சா.ஆ.12 /வா.சா.1 | 03.07.2023 | 1–ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு | சார்பு நகல் |
| 13. | வா.சா.ஆ.13 /வா.சா.1 | --- | நாராயணராஜா, ஆவுடையம்மாள் தம்பதிக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்த மனு | உண்மை நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | வா.சா.ஆ.14 /வா.சா.1 | --- | ஆவுடையம்மாள் ஆதரார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 15. | வா.சா.ஆ.15 /வா.சா.1 | --- | 1 முதல் 3 வாதிகள் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 16. | வா.சா.ஆ.16 /வா.சா.1 | 2021-2022, 2022-2023 | வழக்குச் சொத்திற்கு செலுத்தப்பட்ட தீர்வை ரசீகள் எண்ணிக்கை–2 | இணையவழி பெறப்பட்ட நகல் |
| 17. | வா.சா.ஆ.17 /வா.சா.1 | 2021-2022, 2022-2023 | வழக்குச் சொத்திற்கு செலுத்தப்பட்ட குடிநீர் ரசீது எண்ணிக்கை– 2 | இணையவழி பெறப்பட்ட நகல் |

**<u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சா.சா.ஆ.1/ வா.சா.2 | --- | ரெங்கசாமி ராஜா இறப்புச் சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 2. | சா.சா.ஆ.2/ வா.சா.2 | --- | மகேஸ்வரி என்பவரின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| 3. | சா.சா.ஆ.3/ வா.சா.2 | --- | ரெங்கசாமி ராஜாவின் வாக்காளர் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:–</u>** இல்லை

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>** இல்லை

RAMANATHAN Digitally signed by RAMANATHAN

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**இராஜபாளையம்**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
இராஜபாளையம்
**தீர்ப்புரை**
அசல் வழக்கு எண்.22/ 2024
நாள் : 11-08-2026